**செய்தி வெளியீடு எண் : 2047** **நாள் : 16.11.2022**

**மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் தேசிய பத்திரிகையாளர் தின வாழ்த்துச் செய்தி**

ஜனநாயகத்தை பேணிக்காப்பதில் முக்கிய பங்காற்றும், ஜனநாயகத்தின் நான்காவது தூண்களான அச்சு மற்றும் காட்சி ஊடகத்துறையின் பணிகளை சிறப்பிக்கும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர், 16–ஆம் நாள் தேசிய பத்திரிகை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த மகத்தான நன்நாளில், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் பணிபுரியும் அனைத்து பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத்துறையினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், பத்திரிகையாளர்களின் நலன் காக்க பத்திரிகையாளர் நல வாரியம் அமைத்து, பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்ததோடு மட்டுமல்லாது பத்திரிகையாளர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி, பத்திரிகையாளர் நல நிதியம் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை, இந்த அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவது மட்டுமின்றி, சிறந்த இதழியலாளருக்கு கலைஞர் எழுதுகோல் விருதும் வழங்கி கௌரவித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் அனைத்து மக்கள் நலத்திட்டங்கள் குறித்த செய்திகளை எந்தவித குறைகளுமின்றி மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியை செம்மையாக செய்து வரும், பத்திரிகையாளர்களுக்கும் மற்றும் தொலைக்காட்சி நண்பர்களுக்கும் எனது தேசிய பத்திரிகை தின வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in